உ

கணபதயே நம.

செந்தில்மேய வள்ளிமணாளன் துணை.

# கந்தர் சஷ்டி கவசங்கள்

## ஆறுபடை வீடுகள்



அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம்

நீர்வேலி.

1990

உ

வேலும் மயிலும் துணை

ஸ்ரீ தேவராய சுவாமிகள்

பாடியருளிய

# ஆறுபடை வீடுகளின்
# கந்தர் சஷ்டி கவசங்கள்

( ஸ்ரீ துர்க்கைச் சித்தரின் உபாசனா விதி )




## அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம்
## நீர்வேலி.

பிரமோதூத ௵ கார்த்திகைக் கிருத்திகை
**1990**

வெளியீடு : சுவாமிநாத - இராஜேந்திரக்குருக்கள்
அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம்,
நீர்வேலி.

விலை : ரூபா 12/-



அச்சுப்பதிப்பு :
ஸ்ரீ மீனாட்சி அச்சகம்
நல்லூர்.

உ

வேலும் மயிலும் துணை

# மெய்ப் பொருள்.

கந்தர் சஷ்டி கவசம் என்பது ஓர் மந்திர நூலாகும். எல்லா நலன்களையும் எளிதில் மகிழ்ந்து அருளும் ஸ்ரீ வள்ளி தேவசேனு சமேத ஆறுமுகப் பரம் பொருளின் தூய நலன்கள் பல பொழியும் நூலாகும். இவைகள் முருகனைப்போன்று இளமை மாருமல் நல்ல பலன்களை எளிதில் அடியார்களுக்கு உடனே நல்கி வருகின்றன. ஆறுபடை வீடுகளுக்கும் தனியே கந்த சஷ்டி கவசங்கள் உண்டு. அதனை இப்போதுதான் தமிழுலகம் அறியும் வாய்ப்புக் கிடைத்திருக்கின்றது. திருச் செந்தூர்ப் பெருமானின் மீது பாடிய கவசமே உலக வழக்கில் சிறப்பான இடத்தை வகிக்கின்றது. மற்றைய ஐந்தும் நூல் வடிவில் கிடைப்பது அரிது. அநேகருக்கு இருப்பது தெரியாது. இப்போ சிறிது காலமாகவே வெளியில் எல்லோரும் அறியக் கூடியதாக சிறுகச்சிறுக அச்சில் வெளிவருகின்றது. அதுவும் நம் ஊர்களில் மிகவும் குறைவே.

சமீபத்தில் ஐப்பசிக் கிருத்திகையன்று நல்லூர் முருகன் சந்நிதியினில் ஒரு அடியார் பழனிப்பதிக் கவசத்தை இனிமையுடன் பாடும்பொழுது பக்கத்தில் தரிசனம் செய்துகொண்டு நின்ற நம்மூர் நம் உழுவலன்பர் ஒருவர் அதனைக் கேட்கநேர்ந்தது. அதன் காரணமாக என்னுடன் தொடர்புகொண்டு இதனை வெளிப்படுத்தினுல் மிக நன்ருக இருக்குமே, உபயோகப்படும் என்ருர்கள். அதன் காரணமாக பழைய பிரதி ஒன்று தேடி எடுத்து அச்சேற்றிக் கார்த்திகைக் கிருத்திகையன்று முருகன் சந்நிதிதானத்தில் வெளியிடக்கூடிய ஒரு அரிய வாய்ப்பை அந்தப் பரம்பொருள் பரம கருணுநிதியாகிய செந்தில்மேய வள்ளிமணுளன் அநுக்கிரகித்திருக்கின்ருன்.

இந் நூலைப் பாடியருளியவர் அருட் செல்வரும், மந்திர நன்மொழி மேதையும், ஆறுமுகப் பரம்பொருளின் தவ வடிவைத் தரிசித்து அதன் காரணமாக பெறும் பேறு பெற்றவரான ஸ்ரீ தேவராய சுவாமிகளாகும்.

தெய்வத்தை உணர்ந்தவர்கள் வாக்கினிலேதான் தெய்வ ஒளிவீசும். தெய்வத்துடன் ஒன்றியவர்களின் வாக்குத்தான்

உயர்வுடையது. அதற்கு மொழி வேறுபாடு கிடையாது. ஸ்ரீ தேவராய சுவாமிகள் முருகனைத் தரிசித்து அருள்பெற்றே யாத்துள்ளார். இது முருகனின் ஒளிகாட்டும் தீப மங்களஜோதி. இவரைப் போன்று முருகன் தரிசனமும் அருளும் பெற்றவர்கள் ஸ்ரீ-ல-ஸ்ரீ பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் என்னும் புகழ்மிக்க அருட்செல்வர். அவர்களின் பாடலும் அநேகம். அவர்கள் பாடியருளிய ''முதல்வன் புராண முடிப்பு'' என்னும் பாடலும் கடைசியில் சேர்ந்திருக்கிறது. கவச பாராயணத்திற்குப் பின் படிப்பது நன்று. அத்துடன் ஸ்ரீ துர்க்கைச் சித்தர் அருளிய ''உபாசனு விதி''யும் இணைந்திருக்கின்றது.

இந் நூலைத் தேடுங்கால் ஒரு அம்மையார் ஒரு பழைய பிரதியைத் தந்துதவினுர்கள். அவர்களுக்கும் ஸ்ரீ முருகன் திருவருள் சேர்வதாக. அவசரகால நிலையானதினுல் பல இடையூறுகளுக்கு மத்தியில் வெளிவருவதனுல் ஏற்படும் தவறுகளை நம் வழிபடு தெய்வமாகும் ஸ்ரீ கந்தசுவாமிப்பெருமான் மன்னித்து திருவருள் பொழிவார்கள். ஏனெனில் கச்சியப்ப சிவாச்சாரிய சுவாமிகளே புராணத்தில் ''குறை பல மாமதி கொள்ளினும் அன்னதால் உறுபயன் நோக்கியே உலகம் போற்றல் போல்'' என்று பாடியருளியிருக்கின்றமையால் முருக பக்தர்கள் இதனை ஏற்று, படித்துப் பாராயணம் செய்து வள்ளி தேவசேனு சமேத நீர்வைக்கந்தன் திருவருளைப் பெறுவார்களாக.

முருகன் திருவடியே சரணம்.

— சுவாமிநாத - இராஜேந்திரக்குருக்கள்

அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம்,
நீர்வேலி.

உ

கணபதி துணை

வேலும் மயிலும் துணை

# ஸ்ரீ துர்க்கைச் சித்தர்

அருளிய

# உபாசனு விதி

## (வழிகாட்டி)

எல்லா நலன்களையும் எளிதில் மகிழ்ந்து அருளும் ஸ்ரீ சண்முகநாதனின் தூய நலன்கள் பொலியும் கவசங்கள் பல. வடமொழி, தென் தமிழ் ஆகிய இரண்டிலும் இவைகள் விளங்குகின்றன. தெய்வத் தமிழில் ஸ்ரீ தேவராய சுவாமிகள், ஸ்ரீ-ல-ஸ்ரீ பாம்பன் குமரகுருதாச ஸ்வாமிகள் என்னும் புகழ்மிக்க அருட்செல்வர்கள் அருளியவைகளே சிறந்தன. அவைகள் முருகனைப் போன்று இளமை மாறுமல் நல்ல பலன்களை எளிதில் அடியார்களுக்கு உடனே நல்கி வருகின்றன. இங்கு நம் அருட்செல்வரும், மந்திர நன்மொழி மேதையும், ஸ்ரீ முருகன் தவ வடிவைக் கண்டவருமான ஸ்ரீ தேவராய சுவாமிகள் என்பார், நமக்கு விரும்பி நல்கிய கவசங்களின் பிரயோக விதிகளை மட்டும் சிறிது நோக்குவோம்.

செவ்வாய், வெள்ளி, சஷ்டி, கிருத்திகை, விசாகம் ஆகிய நாட்களில் இந்த ஆறு கவசங்களையும் படிப்பவர் நலன்களை மிகஎளிதில் அடைவார்கள். பரணியன்று இரவும், கிருத்திகையன்று காலையும் ஸ்ரீ சண்முகநாதனின் திருவுருவம் முன்பு படிப்பவர் குறிப்பாக நினைத்த செயல்களில் வெற்றி அடைவார்கள். இந்த சஷ்டி கவசங்களின் ஒளி மிக்க பலன் மிகுதி; அவை எளிதில் சொல்லமுடியாதன.

ஆறு கவசங்களையும் சேர்த்துப் படிப்பதுதான் சிறப்பு, இந்தக் கவசநூலை அந்தணர்கள், முனிவர்கள், குருக்கள், சிவாச்சாரியர்கள் இவர்கள் கையில் கொடுத்து, படிப்பது நல்லது. அது ஓங்காரமான உயிர்த்தத்துவத்தை விரைவில் நன்கு உணர்த்தும். இன்னும் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியான குரு நாதன் முன்பு திருக்கோயில்களில் அமர்ந்து அவரே இதைத் தனக்கு உபதேசிப்பதாகப் பாவனை செய்து கொண்டு, பின்பு தமது வீட்டிலோ ஸ்ரீ முருகன் சன்னதியிலோ படிப்பது மிகவும் நன்மை தருவதாகும். குரு முகமாகக் கல்லாத கல்வி அடியற்ற ஏற்றச்சாலையை ஒக்கும்.

தான்ய லாபம், பூலாபம், எதிர்ப்பில் வெற்றி அடைவது, ரோக நிவாரணம், செவ்வாய் தோஷ நிவர்த்தி இவைகளுக்கும், விவாக பிராப்திக்கும் செவ்வாய்க்கிழமையன்று ஸ்ரீ சண்முகநாதனை ஆறுமுகத்துடன் இருமனைவியருடன் சிந்தித்து வழிபட்டு, பூசனையாற்றி அன்று ஒருபொழுது மட்டும் பகலில் குறை வயிறு உண்டு, மறுநாள் பகலில் பாராயணைசெய்பவர், பெறவிருக்கும் பலன்கள் நிலைத்தவை - நீண்ட நாள் மாயம் செய்யாது திருவருளோடு தங்கி அருள்பவை.

புத்திர பாக்கியம் விரும்புவோர் சஷ்டியில் படிப்பதற்கு இவைகளே மிகச் சிறந்தன. ஸ்ரீ முருகனை ஆறுமுகத்துடன் குழந்தையாக உமையின் பால் சுவைப்பது போல் சிந்தித்து வெள்ளி, அல்லது சங்கு இவைகளினால் ஆகிய குழந்தைகளுக்குப் பால் புகட்டும் பாலாடையில் காய்ச்சாத பசுவின் பாலை நிரப்பி, அதை ஸ்ரீ முருகன் முன்பு படைத்து விட்டு, கவசங்களை மனம் மாறாமல் ஆறுதடவை படிக்கவும், பின்பு முறையாக பூஜையை நிறைவேற்றவும், தன் சக்திக்கு ஏற்ற அளவு தூயபசுவின் பாலில் முன்பு ஸ்ரீ சரவணபவன் முன்னர் படைத்த பாலை எடுத்துக் கலந்து, குழந்தைகளுக்கு அளித்து விட்டுத்தான், தன் இல்லாள் முறையே ஒரு சங்குப் பால் மட்டும் அருந்திவிட்டு, மறுநாள் பாராயணை செய்வது வழிவழி வழக்கம், இம்முறையில் பலன்பெற்ற பக்தர்கள் கோடி.

உத்தியோக லாபத்தை விரும்புவோரும், துவங்கிா வியாபாரச் செழிப்பை நாடுவோரும் கிருத்திகை நாளில் இதைப்படிப்பது நல்லது. உத்தியோக லாபத்தை விரும்புவோர் காலேயிலும், வியாபார விருத்தியை விரும்புவோர் மாலேயிலும் படிப்பது ஏற்றது. பரணி தினத்தில் இரவிலும், கிருத்திகையன்று காலேயிலும், மதியத்திலும், மாலேயிலும், இரவிலும் மறுநாள் பாரணேக்கு முன்புமாகத் தொடர்ந்து ஆறு தடவை வீதம் படிக்கவும். ஒரு மண்டலம் கிருத்திகை விரதம் சங்கல்பம் செய்துகொண்டு இம்முறையில் பாராயணம் செய்பவர்கள் தலேமைப் பதவியைப் பெறுவார்கள். மனேவி மக்கள் செல்வத்துடன் செழித்த, இடையூறு நீங்கிய நல்வாழ்வையும் பெறுவார்கள். கிருத்திகையில் ஸ்ரீ முருகனே வழிபட்டு முனிவர்களின் தலேமைப் பதவியை நாரத முனிவர் பெற்ருர்.

வெள்ளிக்கிழமையன்று இரண்டு சந்தியா காலத்திலும் திருவிளக்கின் முன்பு படிப்பவர்கள் உத்தியோக உயர்வையும் தன லாபத்தையும் அடைவார்கள்; இது உறுதி. மனக் கவலே நீங்கத் திங்களிலும் கல்வி அறிவுபெற வியாழனிலும் இதைப் படிப்பதே சிறப்பு. மற்ற கிழமைகளில் படிப்பதிஞல் ஏற்படும் நற்பலன்கள் அதி ரகஸ்யமானதால் இங்கே விளக்கிக் குறிப்பிடவில்லே. ஸ்ரீ பாம்பன் குமரகுருதாச ஸ்வாமிகள் எழுதிய 'முதல்வன் புராணமுடிப்பு' என்பதைக் கவச பாராயணத்திற்குப் பின்னர் படிப்பது நல்லது.

இந்தக் கவசங்களின் பலன்கள் கடலிலும் பெரியது: அவை எழுத்தாலும் சொல்லாலும் சொல்லி நிறையாதன. சிலவற்றை மட்டும் அந்த அந்தக் கவசத்தின் முடிவில் எல்லாம் வல்ல கன்னிக் குமரியாம் ஸ்ரீ உமையின் செல்வனுன ஸ்ரீ சண்முகநாதனின் திருவருள் கொண்டும், அன்னே அயயாகர்ளுக்கு துணே நின்று நல்வழி காட்டும் ஸ்ரீ பாஸ்கரராடிஹமானின் அருள்வழிச் சென்றும் காட்டுவோம்.

# திருப்பரங்குன்றுறை செல்வன்
## கவசம் ஒன்று

### காப்பு

அமரர் இடர் தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி.

துதிப்போர்க்கு வல்வினைபோம்
துன்பம் போம், நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம்
பலித்துக் - கதித்து ஓங்கும்
நிஷ்டையுங் கைகூடும்
நிமலர் அருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை.

### நூல்

திருப்பரங் குன்றுறை தீரனே குகனே
மருப்பிலாப் பொருளே வள்ளி மனோகரா
குறுக்குத் துறையுறை குமரனே அரனே
இருக்கும் குருபரா ஏரகப் பொருளே
வையா புரியில் மகிழ்ந்து வாழ்பவனே
ஒய்யார மயில்மேல் உகந்தாய் நமோநமோ
ஐயா குமரா அருளே நமோநமோ
மெய்யாய் விளங்கும் வேலா நமோநமோ
பழநியங் கிரிவாழ் பகவா நமோநமோ
மழுவுடை முதல்வன் மதலாய் நமோநமோ
விராலி மலையுறை விமலா நமோநமோ
மராமரம் துளைத்தோன் மருகா நமோநமோ
சூரசம்கார துரையே நமோநமோ

வீரவே லேந்தும் வேளே நமோநமோ
பன்னிரு கரமுடைப் பரமா நமோநமோ
கண்களீ ராறுடைக் கந்தா நமோநமோ
கோழிக் கொடியுடைக் கோவே நமோ. நமோ
ஆழிசூழ் செந்தில் அமர்ந்தாய் நமோநமோ
சசச சசச ஓம் ரீம்
ரரர ரரர ரீம் ரீம்
வவவ் வவவ ஆம் ஹோம்
ணணண ணணண வாம் ஹோம்
பபப பபப சாம் சூம்
வவவ வவவ கௌம் ஓம்
லல லிலி லுலு நாட்டிய அட்சரம்
கக கக கக கந்தனே வருக
இக இக இக ஈசனே வருக
தக தக தக சற்குரு வருக
பக பக பக பரந்தாமா வருக
வருக வருகவென் வள்ளலே வருக
வருக வருகநிஷ் களங்கனே வருக
தாயென நின்னிரு தாள்பணிந்தேன் எனைச்
சேயெனக் காத்தருள் திவ்யமா முகனே
அல்லும் பகலும் அனுதினம் என்னை
எல்லிலும் இருட்டிலும் எரிபகல் படுக்கை
வல்ல விடங்கள் வாரமல் தடுத்து
நல்ல மனத்துடன் ஞான குருஉனை
வணங்கித் துதிக்க மகிழ்ந்துநீ வரங்கள்
இணங்கியே அருள்வாய் இறைவா எப்போதும்
கந்தா கடம்பா கார்த்தி கேயா
நந்தன் மருகா நாரணி சேயே
எண்ணிலாக் கிரியில் இருந்து வளர்ந்தனே
தண்ணளி அளிக்கும் சாமி நாதா
சிவகிரி கயிலை திருப்பதி வேளூர்
தவக் கதிர்காமம் சார்திரு வேரகம்
கண்ணுள் மணிபோல் கருதிடும் வயலூர்

விண்ணவர் ஏத்தும் விராலி மலைமுதல்
தன்னிக ரில்லாத் தலங்களைக் கொண்டு
சன்னிதி யாய்வளர் சரவண பவனே
அகத்திய முனிவனுக்(கு) அன்புடன் தமிழைச்
செகத்தோர் அறிய செப்பிய கோவே
சித்துக்கள் ஆடும் சிதம்பர சக்கரம்
நர்த்தனம் புரியும் நாற்பத் தெண்கோணம்
வித்தாய் நின்ற மெய்ப்பொரு ளோனே
உத்தம குணத்தாய் உம்பர்கள் ஏறே
வெற்றிக் கொடியுடை வேளே போற்றி
பத்திசெய் தேவர் பயனே போற்றி !
சித்தம் மகிழ்ந்திடச் செய்தவா போற்றி !
அத்தன் அரியயன் அம்பிகை லட்சுமி
வாணியுடனே வரையுமாக் கலைகளும்
தானே நானென்று சண்முக மாகத்
தாரணி யுள்ளோர் சகலரும் போற்றி
பூரண கிருபை புரிபவா போற்றி !
பூதலத் துள்ள புண்ணிய தீர்த்தங்கள்
ஓதமார் கடல்சூழ் ஒளிர்புலி கிரிகளில்
எண்ணிலாத் தலங்கள் இனிதெழுந் தருள்வாய்
பண்ணும் நிட்டைகள் பலபல வெல்லாம்
கள்ளம் அபசாரம் கர்த்தனே எல்லாம்
எள்ளினுள் எண்ணெய்போல் எழிலுடை உன்னை
அல்லும் பகலும் ஆசா ரத்துடன்
சல்லாப மாய்உனைத் தானுறச் செய்தால்
எல்லா வல்லமை இமைப்பினில் அருளி
பல்லா யிரநூல் பகர்ந் தருள்வாயே
செந்தில் நகர்உறை தெய்வானை வள்ளி
சந்ததம் மகிழும் தயாபர குகனே
சரணம் சரணம் சரவண பவஓம்
அரன்மகிழ் புதல்வா ஆறுமுகா சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்,

## உபாசனை விதி (சுடர் ஒளி-1)

சோமவாரம் அன்று படிப்பதற்குரிய கவசம் இது. தன்வீட்டில் அமைந்த ஸ்ரீ சரவணபவன் முன்பு படிக்கலாம். சிறப்பாக சிவன்கோவிலில் வள்ளி, தெய்வானையுடன் கூடிய விக்கிரகம் முன்பு படிப்பதே மிகமிக நல்லது. உடனே பலன் தருவதும் ஆகும். இதைப்படித்து ஸ்ரீமுருகனுக்கே கவசத்தை அர்ப்பணம் செய்தால், தானே குருவாக வந்து சிறந்த நூற் புலமையை அருள்வான். எல்லா வல்லமைகளும் எளிதில் கைகூடும். இந்தக் கவசம் மனக்கவலையை நீக்கும். இதை மட்டும் ஐந்து தடவை படித்துத் தேன், தினைமா இவற்றை நிவேதித்து அடியார்க்கு வழங்கித் தானும் உண்டால் மனக் கவலையும், பய நிவர்த்தியும், கிரகதோஷமும் நீங்கும். கவசத்தை துவங்கும் முன்பு குரு உபதேசம் பெற்று ஸ்ரீ புவனேஸ்வரி பீஜத்துடன் கூடிய சண்முகம் மந்திரம் 108-ம் முடிந்த பின்பு 108-ம் குறையாமல் ஜெபிக்க வேண்டும். ருத்ராக்ஷ மாலையால் ஜெபம் செய்யவேண்டும். ஓம் ஹ்ரீம் சரவணபவாய நம; இது ஜெப மந்திரம். குரு மூலம் உபதேசம் பெற்றுக் கொண்டு செய்யவேண்டும். சூரிய உதயத்தில் ஜெபம் செய்தால் இது விரைவில் பயன் தரும். ஆசனத்தில் அமர்ந்து ஜெபம் செய்ய வேண்டும். திரிபுண்டரமாக விபூதி அணிய வேண்டும்.



# செந்தில் மேய சரவணன்

## கவசம் இரண்டு

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மைய நடஞ்செயும் மயில்வா கனனார்
கையில் வேலாலெனைக் காக்கவென்று வந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
சரவண பவச ரரரரரரர
ரிவண பவச ரிரிரிரிரிரிரி
விணபவ சரவண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாச அங்குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக

ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொலி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன் தினம்வருக
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈரறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவ ரத்னம் பதித்த நற்சீராவும்
இருதொடை அழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுகுண டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்தனை யாளும் ஏரகச் செல்வ!
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்

லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைகக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவள் இருக்க

நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்கத் தாக்கத் தடையறத் தாக்க
பார்க்க பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராக் கதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவை களுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய பாவையும் ஒட்டிய செருக்கும்

காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
கால தூதரெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அகன்று புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டுக்
கட்டி உருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
மூட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
சொக்குச் சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்துக் குத்து கூர்வடி வேலால்
பற்றுப் பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரிவயப் போத்தோடு நாயும்
எலியும் கரடியும் இனித்தொடரா தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடுவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மன் சொக்கு சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருஅரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீஎனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குற வாக

ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணு ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா வதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர் வேலவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல் வராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புடன் இரக்ஷி அன்னமுஞ் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவஜம்

வாழ்க வாழ்களென் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவன் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியர் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சட்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உவந்துநீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங் கருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டா வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடி பொடியாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அட்ட லக்ஷ்மிகளில்
வீரலக்ஷ் மிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்தமு தளித்த

குருபரன் பழனிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றென துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணஞ் சரவண பவஓம்
சரணஞ் சரணஞ் சண்முகா சரணம்,

## உபாசனா விதி (சுடர் ஒளி - 2)

ஆறுமுகத்துடன் கூடிய திருச்செந்திலாண்டவன் திருவுருவப் படம் அல்லது ஆறுமுகத்துடன் கோவிலில் அமைந்த விக்ரகம் அல்லது ஷட்கோணம் இவைகளின் முன்பு பாராயணம் செய்வது நல்லது. ஒருமுகனாய் விளங்கும் உருவங்களை விட ஆறுமுகத் தோற்றமே இக்கவச பாராயணத்திற்குச் சிறந்தது. இந்தக் கவசம் பலவித நலன்களை வாரி வழங்கிக் கொண்டு வரும் கற்பகம் ஆகும். இந்த உருவம் சமஷ்டிக் கோலம். பிரும்மா, விஷ்ணு, சிவன், சரஸ்வதி, லெக்ஷ்மி, கௌரி ஆகிய ஆறு சக்தியும் இணைந்து ஒரே சக்தியாக, இந்த சக்திவேல் சண்முகனாக விளங்குகின்றதைத் தெரிந்துகொள்ள வேண்டும். இந்த ஆறு சக்தியுமே ஆறுமுகமாக விளங்குகின்றதை உணர்ந்து கொண்டு அந்த நினைவுடன் படிப்பதுதான் ஏற்றது; அதுவே சிறந்த பலனைக் கொடுக்கக்கூடியது. சஷ்டியிலும், செவ்வாய்க் கிழமையிலும் இந்தக் கவசம் படிக்க வேண்டும். வம்ச விருத்தி, காரிய வெற்றிக்கு சஷ்டியில் காலையிலும்; ரோக நிவர்த்தி, கிரகதோஷ நிவர்த்தி இவைகளுக்குச் செவ்வாய்க் கிழமை மாலையிலும் படிப்பவர் பலன்களை விரைவில் அடைவர். எல்லாவித கல்யாண விசேஷங்களையும் இந்தக் கவசம் அருளும் தன்மை பெற்றது. இது சமஷ்டிக் கோலப் பாராயணமானதால் அறிவு, செல்வம்

வம்ச விருத்தி, வெற்றித் திறன் ஆகியவற்றைப் படிப்பவர், விரும்பிக் கேட்டாலும், கேளாது இருந்தாலும் தானே அருள்வது இதன் தனித் தன்மையாகும்.

இந்த ஆறு கவசங்களையும் தீய செயல்களுக்கு எவ்விதத்தும் பயன்படுத்த முடியாது. நன்மைக்கு மட்டுமே பலன் தரும். இவைகள் நன்மை காய்க்கும் பழ மரங்கள்!

# பழநிப் பதிவாழ் அப்பன்

## கவசம் மூன்று

திருவா வினன்குடி சிறக்கும் முருகா
குருபரா குமரா குழந்தை வேலாயுதா
சரவண சண்முகா சதாசிவன் பாலா
இரவலர் தயாபரா ஏழை பங்காளா
பரமேஸ் வரிக்குப் பாலா தயாபரா
வரமெனக்(கு) அருள்வாய் வாமனன் மருகா
இரண்டா யிரம்வெள்ளம் யோகம் படைத்தவா
திரண்டா ருகமனம் தீர்க்கம் படைத்தவா
இலட்சத் திருநான்கு நற்றம்பி மாருடன்
பட்சத் துடனே பராசக்தி வேலதாய்
வீர வாகு மிகுதள கர்த்தனாய்
சூரசம் காரா துஷ்டநிஷ் டூரா
கயிலாய மேவும் கனகசிம் மாசனா
மயிலேறும் சேவகா வள்ளி மனோகரா
அகத்திய மாமுனிக்கு அருந்தமிழ் உரைத்தவா
சுகத்திரு முருகாற் றுப்படை சொல்லிய
நக்கீரன் நற்றமிழ் நலமென வினவிக்
கைக்கீழ் வைக்கும் கனமிசைக் குறவா
திருவரு ணகிரி திருப்புகழ் பாட
இரும்புகழ் நாவில் எழுதிப் புகழ்ந்தவா
ஆயிரத் தெட்டாம் அருள்சிவ தலத்தில்
பாயிரம் தோத்திரம் பாடப் புகழ்ந்தவா

எண்ணு யிரம்மண் எதிர்கழு வேற்றி
விண்ணோர் குமாரன் வியாதியைத் தீர்த்தவா
குருவாம் பிரமனைக் கொடுஞ்சிறை வைத்து
உறுப்பொருள் வேதம் உரைத்தாய் சிவனுடன்
சுருதிமெய் யோகம் சொல்லிய(து) ஒருமுகம்
வள்ளிதெய் வானையை மருவிய(து) ஒருமுகம்
தெள்ளுநான் முகன்போல் சிருட்டிப்ப(து) ஒருமுகம்
சூரனை வேலால் துணித்த(து) ஒருமுகம்
ஆரணம் ஓதும் அருமறை யடியார்
தானவர் வேண்டுவ தருவ(து) ஒருமுகம்
ஞான முதல்வர்க்கு நற்பிள்ளை பழநி
திருப்பரங் கிரிவாழ் தேவா நமோநம
பொருட்செந்தில் அம்பதி புரப்பாய் நமோநம
ஏரகம் தனில்வாழ் இறைவா நமோநம
கூரகம் ஆவினன் குடியாய் நமோநம
சர்வசங் கரிக்குத் தனயா நமோநம
உறுசோலை மலைமேல் உகந்தாய் நமோநம
எல்லாக் கிரிக்கும் இறைவா நமோநம
சல்லாப மாக சண்முகத் துடனே
எல்லாத் தவமும் இனிதெழுந் தருளி
உல்லா சத்துறும் ஓங்கார வடிவே
மூல வட்டத்தில் முளைத்தெழும் ஜோதியை
சால முக்கோணத் தந்தமுச் சத்தியை
வேலா யுதமுடன் விளங்கிடும் குகனைச்
சீலமார் வயலூர்ச் சேந்தனைத் தேவனை
கைலாச மேருவா காசத்தில் கண்டு
பைலாம் பூமியும் பங்கய பார்வதி
மேலும் பகலும் விண்ணுரு வேத்தி
நாற்கோணத்தில் நளினமாய் அர்ச்சனை
கங்கை யீசன் கருதிய நீர்புரை
செங்கண்மால் திருவும் சேர்ந்துசெய் அர்ச்சனை
அக்கினி நடுவே அமர்ந்த ருத்திரன்

முக்கோண வட்டம் முதல்வாயு ருத்திரி
வாய்அறு கோணம் மகேசுவரன் மகேசுவரி
ஐயும் கருநெல்லி வெண்சாரை தன்மேல்
ஆகாச வட்டத்(து) அமர்ந்த சதாசிவன்
பாகமாம் வெண்மைப் பராசக்தி கங்கை
தந்திர அர்ச்சனை தலைமேற் கொண்டு
மந்திர மூலத்தில் வாசியைக் காட்டி
அக்கினிக் குதிரை ஆகாசத் தேவி
மிக்கவாய்க் கருநெல்லி வெண்சாரை உண்பவர்
பாகமாய் ரதமும் பகல்வழி யாவர்
சாகா வகையும் தன்னை அறிந்து
ஐந்து ஜீவனுடன் ஐயஞ்சு கல்பமும்
விந்தை உமைசிவன் மேன்மையும் காட்டி
சந்திர சூரியர் தம்முடன் அக்கினி
அந்திரனைக்கண்டு(டு) அறிந்தே யிடமாய்ச்
சிந்தையுள் ஏற்றுச் சிவசம்பு தன்னை
மந்திர அர்ச்சனை வாசிவா என்று
தேறுமுகம் சென்னி சிவகிரிமீதில்
ஆறு முகமாய் அகத்துளே நின்று
வாசல் ஒன்பதையும் வளமுடன் வைத்து
யோசனை ஐங்கரன் உடன்விளையாடி
மேலைக் கருநெல்லி வெண்சாரை உண்டு
வாலைக் குழந்தை வடிவையுங் காட்டி
நரைதிரை மாற்றி நாலையுங் காட்டி
உரைசிவ யோகம் உபதேசம் செப்பி
மனத்தில் பிரியா வங்கண மாக
நினைத்த படிஎன் நெஞ்சத் திருந்து
அதிசயம் என்றுன் அடியார்(கு) இரங்கி
மதியருள் வேலும் மயிலுடன் வந்து
நானே நீயெனும் லட்சணத் துடனே
தேனே என்னுள்ளம் சிவகிரி எனவே
ஆரூ தாரத்(து) ஆறுமுகமும்
மாரூ திருக்கும் வடிவையுங் காட்டிக்

கனவிலும் நனவிலும் கண்டுனைத் துதிக்கத்
தனதென வந்து தயவுடன் இரங்கிச்
சங்கொடு சக்கரம் சண்முக தெரிசனம்
எங்கு நினைத்தாலும் என்முன் னேவந்து
அஷ்டாவ தானம் அறிந்துடன் சொல்லத்
தட்டாத வாக்கும் சர்வா பரணமும்
இலக்கணம் இலக்கியம் இசையறிந் துரைக்கத்
துலக்கிய காவியம் சொற்பிர பந்தம்
எழுத்துச் சொற்பொருள் யாப்பலங் காரம்
வழுத்தும்என் நாவில் வந்தினி திருந்தே
அமுத வாக்குடன் அடியார்க்கு வாக்கும்
சமுசார சாரமும் தானே நிசமென
வச்சிர சரீர மந்திர வசீகரம்
அட்சரம் யாவும் அடியேனுக் குதவி
வல்லமை யோகம் வசீகர சக்தி
நல்லஉன் பாதமும் நாடிய பொருளும்
சகலகலை ஞானமும் தானெனக் கருளி
செகதல வசீகரம் திருவருள் செய்து
வந்த கலிபிணி வல்வினை மாற்றி
இந்திரன் தோகை எழில்மயில் ஏறிக்
கிட்டவே வந்து கிருபை பாலிக்க
அட்டதுட் டமுடன் அநேக மூர்க்கமாய்
துட்டதே வதையும் துட்டப் பிசாசும்
வெட்டுண்ட பேயும் விரிசடைப் பூதமும்
வேதாளம் கூளி விடும்புள்ளி வஞ்சனை
பேதாளம் துன்பப் பிசாசுகள் நடுநடுங்க
பதைபதைத் தஞ்சிடப் பாசத்தால் கட்ட
உதைத்து மிதித்தங்(கு) உருட்டி நொருக்கிச்
சூலத்தாற் குத்தித் தூளுதூ ளுருவி
வேலா யுதத்தால் வீசிப் பருகி
மழுவிட் டேவி வடவாக் கினிபோல்
தழுவிஅக் கினியாய்த் தானே எரித்துச்
சிதம்பர சக்கரம் தேவி சக்கரம்

மதம்பெறும் காளி வல்ல சக்கரம்
மதியணி சம்பு சதாசிவ சக்கரம்
பதிகர்ம வீர பத்திரன் சக்கரம்
திருவை குண்டம் திருமால் சக்கரம்
அருள்பெருந் திகரி அக்கினி சக்கரம்
சண்முக சக்கரம் தண்டா யுதத்தால்
விம்ம அடிக்கும் எல்லாச் சக்கரமும்
ஏக ரூபமாய் என்முனே நின்று
வாகனத் துடன்என் மனத்துள் இருந்து
தம்பனம் மோகனம் தயவாம் வசீகரம்
இம்பமா கருடணம் மேவுமுச் சாடனம்
வம்புதாம் பேதனம் வலிதரும் ஆரணம்
உம்பர்கள் ஏத்தும் உயர்வித் வேடணம்
தந்திர மந்திரம் தருமணி அட்சரம்
உந்தன் விபூதி யுடனே சபித்து
கந்தனின் தோத்திரம் கவசமாய்க் காக்க
எந்தன் மனத்துள் எதுவேண்டியதும்
தந்துரட் சித்தருள் தயாபரா சரணம்
சந்ததம் எனக்கருள் சண்முகா சரணம்
சரணம் சரணம் சட்கோண இறைவா
சரணம் சரணம் சத்குரு சம்காரா
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.

## உபாசன விதி (சுடர் ஒளி - 3)

வெள்ளமாம் ஆபத்தில் தோணிபோல் நம்மைக் காப்பாற்றிக் கரையேற்றிவிடும் பொக்கிஷம் இது. செவ்வாய் திசையில் மிகுந்த நற்பலனை விரும்புவோரும், செவ்வாய் கெட்டிருந்து அதனால் பயமுடையோரும் விடாது பிடித்துப் கொள்ளவேண்டிய கவசம் இது. இந்தக் கவசம் படிக்கக் பழனி முருகனும் பண்டாரக் கோலத்தைத் தியானிக்கவும். முடிந்தால் இவ்விதம் அமைந்த கோவில் விக்ரகத்தின் முன் அமர்ந்து படிக்கவும். நோய்கள் விலகுதல், கண் பார்வை, கெட்ட மனத்தார் கூறிய கடும் மொழிகள், விஷரோகம்,

இவை நீங்கும் சொல்வளமும், பாண்டித்யமும் உண்டாகும். வாக்பவ பீஜத்தை பிரணவத்திற்குப் பின் அமைந்த சடாக்ஷரத்தைக் குருமுகமாக உபதேசம் பெற்று இதன் முன்னும் பின்னும் 108க்கு குறையாமல் ஜெபித்து வருபவர் பலனைக் கைமேல் உடனே அடைவார்கள். வைத்தியர்கள் தங்கள் மருந்து பலிக்க இதைச் செவ்வாய் தோறும் இரண்டு சந்தியா காலங்களிலும் படிப்பது நிறைந்த பலன் தருவதாகும்.

# திருவேரகம்வாழ் தேவன்

## கவசம் நான்கு

ஓமெனும் பிரணவம் உரைத்திடச் சிவனா
காமுற உதித்த கனமறை பொருளே
ஓங்கார மாக உதயத் தெழுந்தே
ஆங்கார மான அரக்கர் குலத்தை
வேரறக் களைந்த வேலவா போற்றி
தேராச் சூரரைத் துண்டதுண் டங்களாய்
வேலா யுதத்தால் வீசி அறுத்த
பாலா போற்றி பழநியின் கோவே
நான்கு மறைகள் நாடியே தேடும்
மான்மரு கோனே வள்ளி மணாளனே
நானெனும் ஆண்மை நண்ணிடா(து) என்னைக்
காணநீ வந்து காப்பதுன் கடனே
காளி கூளி கங்காளி ஓங்காரி
சூலி கபாலி துர்க்கை யேமாளி
போற்றும் மூதல்வா புனித குமாரா
சித்தர்கள் போற்றும் தேசிகா போற்றி
'ஏகாட் சரமாய்' எங்கும் தானாகி
வாகாய் நின்ற மறைமுதற் பொருளே
'துதியட்சரத்தால்' தொல்லுல(கு) எல்லாம்
அதிசய மாக அமைத்தவா போற்றி
'திரியட் சரத்தால்' சிவனயன் மாலும்
விரிபா ருலகில் மேன்மை யுற்றவனே

'சதுரட் சரத்தால்' சாற்றுநல் யோகம்
மதுரமாய் அளிக்கும் மயில்வாகனனே
'பஞ்சாட் சரத்தால்' பரமன் உருவதாய்த்
தஞ்சமென் றோரைத் தழைத்திடச் செய்தென்
நெஞ்சகத்(து) இருக்கும் நித்தனே சரணம்
அஞ்சலி செய்த அமரரைக் காக்கும்
ஆறு கோணமாய் ஆறெழுத் தாகி
ஆறு சிரமும் அழகிய முகமும்
ஆறிரு செவியும் அமர்ந்த மார்பும்
ஆறிரு கண்ணும் அற்புத வடிவும்
சரவணை வந்த சடாட்சரப் பொருளே
அரனயன் வாழ்த்தும் அப்பனே கந்தா
கரங்கள்பன் னிரண்டில் கதிரும்ஆ யுதத்தால்
தரங்குலைந்(து) ஓடத் தாரகா சுரன்முதல்
வேரறச் சூர்க்குலம் முடித்து மகிழ்ந்தோய்
சீர்திருச் செந்தூர் தேவசே னாதிப
அஷ்ட குலாசலம் யாவையும் ஆகி
இஷ்டசித் திகளருள் ஈசன் புதல்வா
துட்டசங் காரா சுப்பிர மண்யா
மட்டிலா வடிவே வையாபுரித் துரையே
எண்கோ ணத்துள் இயங்கிய நாரணன்
கண்கொளாக் காட்சி காட்டிய சடாட்சர
'சைவம் வைணவம் சமரச மாக
தைவமாய் விளங்கும் சரவண பவனே'
சரியை கிரியை சார்ந்தநல் யோகம்
இரவலர்க்(கு) அருளும் ஈசா போற்றி
ஏதுசெய் திடினும் என்பால் இரங்கிக்
கோதுகள் இல்லாக் குணமெனக் கருளித்
தரிசனம் கண்ட சாதுவோடு உடன்யான்
அருச்சனை செய்ய அனுக்ரகம் அருள்வாய்
பில்லிவல் வினையும் பீனிச மேகம்
வல்ல பூதங்கள் மாயமாய்ப் பறக்க
அல்லலைப் போக்கிநின் அன்பரோ(டு) என்னைச்
சல்லாப மாகச் சகலரும் போற்ற

கண்டு களிப்புறக் கருணை அருள்வாய்
அண்டர் நாயகனே அருமறைப் பொருளே
குட்டிச் சாத்தான் குணமிலா மாடன்
தட்டிலா இருளன் சண்டிவே தாளம்
சண்டமா முனியும் தக்கராக் கதரும்
மண்டை வலியொடு வாதமும் குன்மமும்
சூலைகா மாலை சொக்கலும் சயமும்
மூல ரோகங்கள் முடக்கு வலிப்பு
திட்டு முறைகள் தெய்வத சாபம்
குட்டம் சோம்பல் கொடிய வாந்தியும்
கட்டிலாக் கண்ணோய் கண்ணேறு முதலா
வெட்டுக் காயம் வெவ்விடம் அனைத்தும்
உன்னுடைய நாமம் ஓதியே நீறிடக்
கன்னலொன் றதனில் களைந்திடக் கருணை
செய்வதுன் கடனே செந்தில் நாயகனே
தெய்வ நாயகனே தீரனே சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.

## உபாசன விதி (சுடர் ஒளி - 4)

இந்தக் கவசம் அறிவுத்தெளிவையும், நினைவுச் சக்தியையும் மிகத் தந்து அருள்வது. கல்வி கற்கும் குழந்தைகளுக்கு இதைப்பாடம் சொல்லி வைத்து வியாழன் அன்று காலையில் தனது கல்வியைத் துவங்குமுன் சொல்லும் வண்ணம் செய்ய வேண்டும். இம்முறையில் முதலில் இக் கவசத்துடன் தனது அன்றைய படிப்பைத் துவங்கும் இளஞ் செல்வர்கள் நிச்சதமாக எதிர்காலத்தில் தங்கள் குலத்தில் யாரும் அடையாய அளவில் தலைசிறந்த பதவியை அடைந்து, அறிவுடன் கூடிய நிலையான பொருட் செல்வம் பெற்றுப் புகழுடன் வாழ்வார்கள். கவசத்தை ஆறு தடவை படித்து ஸ்ரீ சடாக்ஷரத்துடன் திருநீறை இட்டுக் கொண்டவரின் நோய்கள் வெகுவிரைவில் விலகும்.

# குன்றுதோறுடும் குமரன்

## கவசம் ஐந்து

கணபதி துணைவா கங்காதரன் புதல்வா
குணவதி உமையாள் குமரா குருபரா
வள்ளி தெய்வானை மருவிய நாயகா
துள்ளி மயிலேறும் சுப்பிரமணியா
அழகொளிப் பிரபை அருள்வடி வேலா
பழநி நகரில் பதியநு கூலா
திருவா வினன்குடி சிறக்கும் முருகா
அருள்சேர் சிவகிரி ஆறு முகவா
சண்முக நதியும் சராபன்றி மலையும்
பண்முகம் நிறைந்த பழநிக்கு இறைவா
ஆராறு நூற்று அட்டமங் களமும்
வீரவை யாபுரி விளங்கும் தயாபரா
ஈராறு பழநி எங்கும் தழைக்கப்
பாராறு சண்முகம் பகரும் முதல்வா
ஆறு சிரமும் ஆறு முகமும்
ஆறிரு புயமும் ஆறிரு காதும்
வடிவம் சிறந்த மகர குண்டலமும்
தடித்த பிரபைபோல் சார்ந்த சிந்தூரமும்
திருவெண் ணீறணி திருநுதல் அழகும்
கருணை பொழியும் கண்ணுன்கு மூன்றும்
குனித்த புருவமும் கூரிய மூக்கும்
கனித்த மதுரித்த கனிவாய் இதழும்
வெண்ணிலாப் பிரபைபோல் விளங்கிய நகையும்
எண்ணிலா அழகாய் இலங்குபல் வரிசையும்
காரிகை உமையால் களித்தே இனிதெனச்
சீர்தரும் வள்ளி தெய்வநாய கியாள்
பார்த்தழ கென்னப் பரிந்த கபோலமு
வார்த்த கனகம்போல் வடிவேல் ஒளியும்
முறுக்குமேல் மீசையும் மூர்க்கம் சிறக்க
மறுக்கம் சூரர்மேல் வர்துகள் ஆட

ஈச்வரன் பார்வதி எடுத்துமுத் தாடி
ஈச்வரன் வடிவை மிகக்கண் டனுதினம்
கையால் எடுத்துக் கனமார்(பு) அணைத்தே
ஐயா! குமரா! அப்பனே! என்று
மார்பினும் தோளினும் மடியினும் வைத்துக்
கார்த்தி கேயாஎனக் கருணையால் கொஞ்சி
முன்னே கொட்டி முருகா! வருகவென்(று)
அந்நேரம் வட்டமிட் டாடி விளையாடித்
தேவியும் சிவனும் திருக்கண் களிகூரக்
கூவிய மயிலேறும் குருபரா வருக
தாவிய தகரேறும் சண்முகா வருக
ஏவிய வேலேந்தும் இறைவா வருக
கூவிய சேவற் கொடியோய் வருக
பாவலர்க் கருள்சிவ பாலனே வருக
அன்பர்க் கருள்புரி ஆறுமுகா வருக
பொன்போல் சரவணைப் புண்ணியா வருக
அழகிற் சிவனொளி அய்யனே வருக
களபம் அணியுமென் கந்தனே வருக
மருமலர்க் கடம்பணி மார்பா வருக
மருவுவோர் மலரணி மணியே வருக
திரிபுர பவனெனும் தேவே வருக
பரிபுர பவனெனும் பவனே வருக
சிவகிரி வாழ்தெய்வ சிகாமணி வருக
காலில் தண்டை கலீர் கலீரென
சேலிற் சதங்கை சிலம்பு கலீரென
இடும்பனை மிதித்ததோர் இலங்கிய பாதமும்
அடும்பல வினைகளை அகற்றிய பாதமும்
சிவகிரி மீதினில் திருநிறை கொலுவும்
நவகிரி அரைமேல் இரத்தினப் பிரபையும்
தங்கரை ஞாணும் சாதிரை மாமணி
பொங்குமாந் தளிர்சேர் பொற்பீதாம் பரமும்
சந்திர காந்தச் சரிகைத் தொங்கலும்

மந்திர வாளும் வங்கிச் சரிகையும்
அருணோ தயம்போல் அவிர்வன் கச்சையும்
ஒருகோடி சூரியன் உதித்த பிரபைபோல்
கருணையால் அன்பரைக் காத்திடும் அழகும்
இருகோடி சந்திரன் எழிலொட்டி யாணமும்
ஆயிரம் பணமுடி அணியுமா பரணமும்]
வாயில்நன் மொழியாய் வழங்கிய சொல்லும்
நாபிக் கமலம் நவரோம பந்தியும்
மார்பில் சவ்வாது வாடை குபீரென
புனுகு பரிமளம் பொருந்திய புயமும்
ஒழுகிய சந்தனம் உயர்கஸ் தூரியும்
வலம்புரிச் சங்கொளி மணியணி மிடறும்
நவம்சேர் உருத்திர அக்க மாலையும்
மாணிக்கம் முத்து மரகதம் நீலம்
ஆணிவை டூரியம் அணிவைரம் பச்சை
பவளகோ மேதகம் பதித்தவச் சிராங்கியும்
நவமணிப் பிரபைபோல் நாற்கோடி சூரியன்
அருணோ தயமெனச் சிவந்த மேனியும்
கருணை பொழியும் கடாட்சவீட் சணமும்
கவசம் தரித்தருள் காரண வடிவும்
நவவீரர் தம்முடன் நற்காட்சி யான
ஒருகை வேலாயுதம் ஒருகை சூலாயுதம்
ஒருகை நிறைசங்கு ஒருகை சக்ராயுதம்
ஒருகை நிறைவில்லு ஒருகை நிறையம்பு
ஒருகை மந்திரவாள் ஒருகை மாமழு
ஒருகை மேற்குடை ஒருகை தண்டாயுதம்
ஒருகை சந்திராயுதம் ஒருகை வில்லாயுதம்
அங்கையில் பிடித்த ஆயுதம் அளாவிப்
பங்கயக் கமலப் பன்னிரு தோளும்
முருக்கம் சிறக்கும் முருகா சரவணை
இருக்கும் குருபரா ஏழை பங்காளா
வானவர் முனிவர் மகிழ்ந்து கொண்டாடத்
தானவர் அடியவர் சகலரும் பணியப்

பத்திர காளி பரிவது செய்யச்
சக்திகள் எல்லாம் தாண்டவ மாட
அஷ்ட பயிரவர் ஆனந்த மாட
துஷ்ட மிகுஞ்சூளிகள் சூழ்திசை காக்க
சத்த ரிஷிகள் சாந்தக மென்னச்
சித்தர்கள் நின்று சிவசிவா என்னத்
தும்புரு நாரதர் சூரிய சந்திரர்
கும்பமா முனியும் குளிர்ந்ததா ரகையும்
அயன்மால் உருத்திரன் அஷ்ட கணங்கள்
நயமுடன் நின்று நாவால் துதிக்க
அஷ்ட லக்ஷ்மி அம்பிகை பார்வதி
கட்டழகன் என்று கண்டுனே வாழ்த்த
இடும்பா யுதன்நின் இணையடி பணிய
ஊடும் தேவகன்னி ஆலத்தி எடுக்க
தேவ கணங்கள் ஜெயஜெய என்ன
ஏவற் கணங்கள் இந்திரர் போற்ற
கந்தருவர் பாடிக் கவரியை வீசிச்
சார்ந்தனம் என்னச் சார்வரும் அநேக
பூதம் அடிபணிந் தேத்தவே தாளம்
பாதத்தில் வீழ்ந்து பணிந்து கொண்டாட
அரகர என்றடியார் ஆலவட்டம் பிடிக்க
குருபரன் என்றன்பர் கொண்டாடி நிற்க
குடையும் சேவலின் கொடியும் சூழ
இடை விடாமல்உன் ஏவலர் போற்றச்
சிவனடியார்கள் திருப்பாத மேந்த
நவமெலும் நால்வரை ஏற்ற சரமண்டலம்
உருத்திர வீணை நாதசுர மேளம்
தித்திமி என்று தேவர்கள் ஆடச்
சங்கீத மேளம் தாளம் துலங்க
மங்களமாக வைபவம் இலங்க
தேவ முரசடிக்கத் தினமேள வாத்தியம்
சேவல் கொடியும் சிறப்புடன் இலங்க
நந்திகே சுரவன் மீது ஏறிய நயமும்

வந்தனம் செய்ய வானவர் முனிவர்
எங்கள் பார்வதியும் ஈசனும் முன்வர
ஐங்கரன் முன்வர ஆறுமா முகவன்
வீர மயிலேறி வெற்றிவேல் எடுத்துச்
சூரன்மேல் ஏவத் துடித்தவன் மடியச்
சிங்கமுகா சுரன் சிரமது உருளத்
துங்கக் கயமுகன் சூரனும் மாள
அடவற்ற குலத்தை அறுத்துச் சயித்து
விடவே லாயுதம் வீசிக் கொக்கரித்துத்
தம்ப மெனும்சயத் தம்பம நாட்டி
அன்பர்கள் தம்மை அனுதினம் காத்துத்
திருப்பரங் குன்றம் சீர்பதி செந்தூர்
திருவாவி னன்குடி திருவே ரகமும்
துய்ய பழநி சுப்பிர மணியன்
மெய்யாய் விளங்கும் விராலி மலைமுதல்
அண்ணு மலையும் அருள்மேவும் கயிலை
கண்ணிய மாவூற்று கழுகுமா மலையும்
முன்னிமை யோர்கள் முனிவர் மனத்திலும்
தன்னய மாய்ப்பணி நண்பர் மனத்திலும்
கதிர்காமம் செங்கோடு கதிர்வேங் கடமும்
பதினு லுலகத்திலும் பக்கர் மனத்திலும்
எங்கும தானவ ணுயிருந்(து) அடியர்தம்
பங்கி லிருந்து பாங்குடன் வாழ்க !
கேட்ட வரமும் கிருபைப் படியே
தேட்டமுடன் அருள் சிவகிரி முருகா
நாட்டு சிவயோகம் நாடிய பொருளும்
தாட்டிக மாய்எனக்(கு) அருள்சண் முகனே
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.

## உபாசன விதி (சுடர் ஒளி-5)

எல்லாவிதமான காரிய சித்திகளுக்கும், காமனைகளின் வெற்றிக்கும் உதவுவது இக் கவசம். ஐங்கோணத்தில் அமைந்த மாக்கோலத்தின் நடுவில் திருவிளக்கை ஏற்றி வைத்து புஷ்ப, தூப, தீப, நைவேத்தியங்களை அந்தத் திரு விளக்கிற்குச் செய்து, பின்பு இதைப்படிக்கவும், கேட்டவரம் அருளும் ஸ்ரீ குகன் மகிழ்ச்சி அடையும் தூய கவசம் இது. தமிழ்ச் சொல் வல்லமை பெறவிரும்புவோருக்கும், எழுத்து ஆற்றல்பெற விரும்பு வோருக்கும் இது துணை செய்து உடன் காப்பது. வியாழன், பரணி, கிருத்திகை இந்த மூன்று நாட் களிலும் காலைமாலை ஆகிய இரண்டு சந்தியா காலங்களிலும் நிலைத்த !மனத்துடன் படிப்பவர் நினைத்த செயல்களில் உடனே வெற்றி அடைவார்கள்.

விசாக தினத்தில் தன் குடும்பத்தோர் யாவரும் ஒன்று சேர்ந்து அமர்ந்துகொண்டு இதைப்படித்தால் குடும்ப பீடை கள் விலகும்; தனம் பெருகும். புகழை விரும்புவோர் வைகாசி மாதம் விசாக தினத்தில் பதினாறு தடவை படித் தால் மிக்க பலன் விரைவில் கிடைக்கும்.

---

# பழமுதிர் சோலைப் பண்டிதன்

## கவசம் ஆறு

---

சங்கரன் மகனே சரவண பவனே
ஐங்கரன் துணைவனே அமர்ரதம் கோனே
செங்கண்மால் மருகனே தெய்வானை கேள்வனே
பங்கயம் போன்ற பன்னிரு கண்ணனே
பழநிமா மலையுறும் பன்னிரு கரத்தனே
அழகுவேள் ஏந்தும் ஐயனே சரணம்
சரவண பவனே சட்கோணத் துள்ளுறை
அரனருள் சுதனே அய்யனே சரணம்
சயிலொளி பவனே சடாட்சரத் தோனே
மயில்வா கனனே வள்ளலே சரணம்
திரிபுர பவனே தேவசே னாபதி
குறமகள் மகிழும் குமரனே சரணம்

திகமொளி பவனே சேவற் கொடியாய்
நகயா யுதமுடை நாதனே சரணம்
பரிபுர பவனே பன்னிரு கையனே
தருணமிவ் வேளை தற்காத் தருளே
சவ்வும் ரவ்வுமாய்த் தானே யாகி
வவ்வும் ணவ்வுமாய் விளங்கிய குகனே
பவ்வும் வவ்வுமாய் பழமுதிர் சோலையில்
தவ்வியே ஆடும் சரவண பவனே
குஞ்சரி வள்ளியைக் குலாவி மகிழ்வோய்
தஞ்சமென் றுன்னைச் சரணம் அடைந்தேன்
கொஞ்சிய உமையுடன் குழவியாய்ச் சென்றங்(கு)
அஞ்சலி செய்தவள் அமுதமும் உண்டு
கார்த்திகை மாதர் கனமார்(பு) அமுதமும்
பூர்த்தியாய் உண்ட புனிதனே குகனே
நவமைந்தர் சிவனுல் நலமுடன் உதிக்கத்
தவமுடை வீர வாகுவோ(டு) ஒன்பான்
தம்பிமா ராகத் தானையைக் கொண்ட
சம்பிரதாயா சண்முகா வேலா
நவவீரர் தம்முடன் நவகோடி வீரரும்
கவனமாய் உருத்திரன் அளித்தே களித்துப்
பேதம் இல்லாமல் பிரமனைக் குருவாய்
ஓதிடச் செய்ய உடன் அவ் வேதனை
ஓமெனும் பிரணவத் துண்மை நீகேட்கத்
தாமே யோசித்த சதுர்முகன் தன்னை
அமரர்கள் எல்லாம் அதிசயப் படவே
மமதையாய் அயனை வன்சிறை யிட்டாய்
விமலனும் கேட்டு வேகம தாக
உமையுடன் வந்தினி துவந்து பரிந்து
அயனைச் சிறைவிடென்(று) அன்பாய் உரைக்க
நயமுடன் விடுத்த ஞான பண்டிதனே
''திருமால் அயன்சிவன் சேர்ந்து மூவரும்
கௌரி லக்ஷ்மி கலைமக ளுடனே
அறுவரோர் அம்சமாய் அரக்கரை வெல்ல

ஆறு முகத்துடன் அவதரித் தோனே''
சிங்க முகாசுரன் சேர்ந்த கயமுகன்
பங்கமே செய்யும் பானு கோபனும்
சூரனே டொத்த துட்டர்க ளோடு
கோரமே செய்யும் கொடியராக் கதரை
வேருடன் கொல்லி விண்ணவர் துன்பம்
ஆறிடச் செய்தவ் வமரர்கள் தமக்குச்
சேனு பதியாய் தெய்விகப் பட்டமும்
தானுய்ப் பெற்ற தாட்டிகப் பெருமனே
திருப்பரங் குன்றம் செந்தூர் முதலாய்ச்
சிறப்புறு பழநி திருவே ரகமுதல்
எண்ணிலாத் தலங்களில் இருந்தாடும் குகனே
விண்ணவன் ஏத்தும் விநோத பாதனே
அன்பர்கள் துன்பம் அகற்றியாள் பவனே
தஞ்சமென்(று) ஓதினர் சமயம் அறிந்தங்(கு)
இன்பங் கொடுக்கும் ஏழை பங்காளா
கும்பமா முனிக்குத் குருதே சிகனே
தேன்பொழில் பழநித் தேவ குமாரா
கண்பார்த்(து) எனையாள் கார்த்திகே யாஎன்
கஷ்ட நிஷ்டுரம் கவலைகள் மாற்றி
அஷ்டலக்ஷ் மிவாழ் அருளெனக்(கு) உதவி
இட்டமாய் என்முன் னிருந்து விளையாடத்
திட்டமாய் எனக்கருள் செய்வாய் குகனே
அருண கிரிதனக்(கு) அருளிய தமிழ்போல்
கருணையால் எனக்குக் கடாட்சித் தருள்வாய்
தேவராயன் செப்பிய கவசம்
புவல யத்தோர் புகழ்ந்து கொண்டாட
சஸ்டி கவசம் தான் சேவிப்போரைச்
சிஷ்டராய்க் காத்தருள் சிவகிரி வேலே
வந்தென் நாவில் மகிழ்வுடன் இருந்து
சந்தத் தமிழ்த் திறம் தந்தருள் வோனே
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் தமிழ்தரும் அரசே
சரணம் சரணம் சங்கரன் சுதனே
சரணம் சரணம் சண்முகா சரணம்.

## உபாசன விதி (சுடர் ஒளி - 6)

சங்கத் தமிழ் ஆற்றல் மிக்க மக்களைப் பெற விரும்பு வோர் படிக்க உதவும் கவசம் இது, ஆறுமுகக் கோலத்துடன் அமைந்த திருமுருகன் முன்பு தனது இளஞ் செல்வங்களை அமர்த்தி அவர்கள் காதில் விழும் வண்ணம் வாய்விட்டு இதைப் படிக்க வேண்டும். இவ்விதம் படனம் செய்வதைக் கேட்டுக் குழந்தைகள் ஆணாயினும், பெண்ணாயினும் எதிர் காலத்தில் சிறந்த இலக்கண, இலக்கிய மேதையாகி, சந்தத் தமிழ்க் கவிஞர்களாகிப் புகழ் நின்ற பெருவாழ்வுடன் ஒளி விடுவார்கள். அவர்களுக்கு பசியும், பஞ்சமும் கொஞ்சமும் என்றும் ஏற்படாது. தன் மக்களுக்கு என்று பெற்றவர் செய்ய வேண்டிய, சேர்த்து வைக்க வேண்டிய அருட் செல்வம் இது.

ஒவ்வொரு பிரயோகங்களுக்கும் நைவேத்தியம், மந்திரம் முதலியவை தனியாக உள்ளன. அவைகள் சில காரணங்களால் இங்கே விரிவாக விளக்கப் பெறவில்லை. நோய்களின் துயரப் பிடியில் இருந்து விலகக் கையாளும் பிரயோக முறைகளை விரும்புவோருக்கு மட்டிலும் நாம் தனியாக எழுதிக் காட்டுவோம்.

ஆறு கவசங்களும் முற்றிற்று.

---

## உபாசன விதி (பொது)

கவசங்களை யெல்லாம் சேர்ந்தாற் போல் படிப்பதே சிறப்பு. ஒவ்வொரு கவசத்தை மட்டும் படிக்க விரும்பு வோரும் கவச பாராயணத்திற்கு முன்னும் பின்னும் 108 குக் குறையாமல் ஸ்ரீ சடாக்ஷர ஜெபம் செய்ய வேண்டும். அதுதான் பலன் தர வழிசெய்யும், ஜெபமில்லாத பாரா யணம் வாய்க்கால் இன்றி வயலுக்கு வெறும் மேட்டில் தண் ணீர் இறைப்பது போலாம். குளித்துவிட்டுத்தான் படிக்க வேண்டும். உடல் நலம் இல்லாதவர்களுக்கு மற்றவர்கள் இதைப் படிக்கலாம். அவர் தன் விருப்பங்களை மறந்துவிட்டு

யாருக்காகப் படிக்கின்றரோ அவர் விருப்பத்தை மட்டும் நினைவில் கொள்ளவேண்டும். நல்ல எண்ணெய் விளக்கைமட்டுமே பூஜை அறையில் வைத்துக்கொள்ள வேண்டும். மின் விளக்கை பூஜையின் போது பயன்படுத்தல் சிறப்பல்ல. பரணியன்று இலுப்பை எண்ணெயில் ஏற்றிய விளக்கை வழிபட்டு அதன் முன்பு இந்த ஆறு கவசங்களையும் படிப்பவர்கள் நோயிலிருந்து விரைவில் விடுபடுவார்கள். யம பயமின்றி முடிவில் ஸ்ரீ ஸ்கந்த சாயுஜ்யம் அடைவார்கள். எல்லாக் கவசங்களையும் பிழையின்றி நன்கு படிக்கப் பழகிக்கொள்ள வேண்டும். மனத்துள் படிப்பவர் பாதிப் பலனைத்தான் பெறுவார்கள். நன்றாக வாய்விட்டு (ராகம் போடாமல்) நூலைப் பாராமலே சொல்ல வேண்டும். புத்தகத்தைக் கையில் வைத்துக் கொண்டு படிக்கக்கூடாது. சிக்குப் பல கையில் வைத்துக் கொண்டே மனனம் ஆகும் வரை முறையாகப் படிக்க வேண்டும். நூலுக்கு அலரிட்டு வழிபட்டு, பின்பே படிக்க வேண்டும்.

கவச பாராயணம், ஜெபம் நிறைந்த பிறகு ஸ்ரீ முருகனுக்கு விருப்பமான திருப்புகழ், கந்தர் அலங்காரம், கந்தர் அனுபூதி, கந்த புராணம், பிள்ளைத் தமிழ் ஆகிய ஐந்து நூல்களில் இருந்தும் பாடல்களை முறையே படிக்கவேண்டும். இது தேவார வழிபாட்டுப் பஞ்ச புராணத்தை ஒக்கும். மிக மிக எளிய முறைகள் மட்டுமே இங்கே குறிப்பிடப்பட்டுள்ளன. இந்தக் கவசங்களின் பயனும், உதவியும் வானிலும் பெரிது. இதைப் படிப்பவர்களுக்கும், படித்துக் கேட்பவர்களுக்கும் எல்லாம் வல்ல கன்னிக் குமரியாம் ஸ்ரீ உமா மகேஸ்வரியும், ஸ்ரீ வள்ளி தேவசேனு சமேத ஸ்ரீ சண்முகநாதனும் முறை தவருத பாராயணத்தால் விளையும் நற்பயனேடு மோக்ஷம் வரையில் உள்ள எல்லா நலன்களையும் சேர்த்து அருள வேண்டும் என்று நிறை மனத்துடன் சிந்திக்கின்றோம்.

— ஸ்ரீ துர்க்கைச் சித்தர்

உபாசன விதி முற்றிற்று.

வேலும் மயிலும் துணை

ஸ்ரீமத் பாம்பன் குமரகுருதாச ஸ்வாமிகள்

அருளிய

# முதல்வன் புராண முடிப்பு

## அந்தாதி

கலிவிருத்தம் ( இசை )

சந்திர சேகரன் றழற்கண் ணேபொறி
வந்தன வாறவை மாசில் கங்கைசார்ந்
தைந்துட னென்றணை குழவி யாகியா
றந்தநன் மாதர்க ளமுத முண்டவே. 1.

உண்டவை பலபல வுருவங் காட்டுப
பண்டுமை யாலொரு படிவ மாயவள்
கண்டென வருத்தமு துண்டு காமர்செய்
அண்டவெ ண் கயிலைசென் றுடல் செய்யுமால். 2.

ஆடலில் வெஞ்சுட ரகவ மேறிய
தீடணை யம்புலி யிரத மூர்ந்தது
மூடமி லிந்திரன் முதலி னோர்கரி
சேடண வூர்ந்தது செம்பொற் சேயரோ. 3.

செங்கரு டன்புலி சீய மோதிமஞ்
சங்குற ழேறுழை சரபம் யாடிவர்ந்
தெங்கணு மேகிய தெழில்கொ ளெந்நில
மங்கைய ரும்விழை மகிமைப் பிள்ளையே. 4.

பிள்ளைமை நீத்தொரு பெருவ யோதிகம்
உள்ளவ னுய்ச்சுர ருலகை நன்குசெய்
உள்ளமொ டங்ஙன முலாவி னுனவன்
நள்ளிட னடைந்துகின் னிரஞ்செய் தானவன். 5.

செய்யத னேசையிற் சேர்வி லங்குபுள்
மெய்யைம றந்தன வேய்ங்கு ழற்றெனி
ஐயனெ ழுப்பின னகலுண் மாதர்கள்
மையல்செய் விரமுள் வருந்த நாளுமே. 6.

மேலட ரண்டமு மேய சேயவன்
மாலுடல் வரையிடை வந்து வானவர்
பாலுறு வலிகளைப் பாறச் செய்துதன்
வாலிருந் தைவத வடிவு காட்டினுன். 7.

காட்டலுஞ் சதமகன் கடவு ளேயெமை
வாட்டொரு சூரனை மடித்துக் காவெனக்
கேட்டவ னஞ்சன்மின் கிருபை செய்துமென்
ருட்டரன் பாற்படை யரசை வழங்கினுன். 8.

வாங்கிமற் கணத்தொடு மகிவந் தோதியும்
வீங்குமெய்க் கயமுகன் றனையும் வீட்டுபு
பாங்குடைச் சிங்கனும் பானு கோபனும்
நீங்கிடக் கண்டவர் நிருபற் கிண்டனன்.

கிளவை பரிகொடி யாய்க்கி ளர்ந்தன
ஆளொரு வரையடைந் தருணை யான்புகழ்
வாளன கண்ணியை மணந்து விண்புரந்
தாளெயின் மான்மணந் தான்ச யம்புவே. 10.

---

## எமது வெளியீடுகள் :

- கூட்டுப் பிரார்த்தனைப் பாடல்கள்
- இரதோற்சவ மலர்
- பழம் நீ
- சுப்பிரமணிய ஷட்கம் (கும்பாபிஷேக வெளியீடு)
- சுப்பிரமணிய புயங்கம் மூலம் - சமஸ்கிருதம்<br>பொழிப்புரை - தமிழ்
- திருமுருகாற்றுப்படை பொழிப்புரை
- திருப்புகழ் ,, 66 ,,
- கந்தரனுபூதி
- நீர்வைக்கந்தன் பாமாலை

உ



கண்ணிகர் மெய்யும் சென்னிக்
கணமுறழ் சேர்க்கைச்சீரும்
திண்ணிய புயங்களேபோல் திகழ்தரும்
உயிரும் வெறுன்று
எண்ணிடற் கரியதாகும் எஃகமும்
இயலிற் காட்டும்
புண்ணிய முனிக்கோன் செவ்வேள்
பொற்பதத்து அடிமைதானே.

— *புலவர் புராணம்*

*முருகப்பெருமானின் சீடரான அகத்திய மகா முனிவர் தமிழ் மொழியைப் பாகுபடுத்தியபோது உயிர் எழுத்துக்கள் பன்னிரண்டைத் தோள்கட்கும், அதன் ஈற்றில் உள்ள ஆய்த எழுத்தை ஆயுதப் பொதுப் பெயரில் உள்ள எஃகம் என்ற வேலாயுதத்துக்கும், மெய்யெழுத்து பதினெட்டை கண்கள் பதினெட்டுக்கும், வலி - மெலி - இடை என்ற இன எழுத்து ஆறுயிருப்பதை முகங்கட்கும் பொருந்தச் செய்தார் என்ற நுன் கருத்தினை தம் அனுப ஆராய்வில் முருகன் உணர்த்திய படி கூறியமை சிந்தனைக்குரியது.*

ஸ்ரீ மீனாட்சி அச்சகம், நல்லூர்